

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.2.2026) பேரறிஞர் அண்ணா அவர்களின் 57–வது நினைவு நாளையொட்டி சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.2.2026) பேரறிஞர் அண்ணா அவர்களின் 57–வது நினைவு நாளையொட்டி, சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கொலை செய்யப்பட்ட

# பீகார் மாநில தம்பதியர் - குழந்தை உடல்கள் சொந்த மாநிலம் கொண்டு செல்ல நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, பிப். 4-**

**கொலை செய்யப்பட்ட பீகார் மாநில தம்பதியர் மற்றும் குழந்தையின் உடல்களை சொந்த மாநிலத்திற்கு கொண்டு செல்லவும் உறவினர்களிடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

பீகார் மாநிலத்திலிருந்து வேலை தேடி சென்னைக்கு வந்த தம்பதியர் கவுரவ்குமார் அவரது மனைவி திருமதி புனிதாகுமாரி மற்றும் அவரது 2 வயது குழந்தை ஆகியோர் வடமாநிலத்தைச் சேர்ந்த வாலிபர்களால் கடந்த சில நாட்களுக்கு முன்பு கொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட 3 குற்றவாளிகள் சென்னை மாநகர காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட மூவரது உடல்களையும் அவர்களது சொந்த மாநிலத்திற்கு கொண்டு செல்ல உதவி தேவைப்படுகிறது என்ற செய்தியை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் எவ்வித கட்டணமுமின்றி, அவர்களது உடல்களை சொந்த மாநிலத்திற்கு கொண்டு சென்று உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

# 'என் கனவு - என் எதிர்காலம்' திட்டம்:

## திண்டிவனத்தில் முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்!

*விழுப்புரம், பிப். 4 -*

*'என் கனவு - என் எதிர்'காலம்' என்ற திட்டத்தை விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் பகுதியில் இன்று புதன் கிழமை (பிப்.4) முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.*

*தமிழகம் முழுவதும் 2025, ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்' தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டது. மொத்தமாக 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்ட நிலையில், அந்த முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் அடிப்படையில் 1.80 லட்சம் பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கும் விழா, 'என் கனவு - என் எதிர்காலம்' இணையதள தொடக்க விழா மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் முடிவுற்ற பணிகள் தொடக்க விழா மற்றும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா இன்று புதன் கிழமை (பிப்.4) நடைபெறவுள்ளது.*

*திண்டிவனம் -செஞ்சி சாலையில், கொள்ளார் கிராமத்திலுள்ள சிப்காட் வளாகத்தில் நடைபெறும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, நலத்திட்டப் பயன்களையும், சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்களையும் வழங்கி, 'என் கனவு - என் எதிர்காலம்' என்ற திட்டத்தில் இளைஞர்களின் கனவுகளைப் பதிவு செய்ய உருவாக்கப் பட்டுள்ள இணையதளத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.*

*இதைத் தொடர்ந்து 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நல உதவிகளை முதல்வர் வழங்குகவுள்ளார். முதல்வர் வருகையையொட்டி விழா நடைபெறும் பகுதி, திண்டிவனம் பகுதிகள், முதல்வர் வரும் வழித்தடப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*

### பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி –

# ஒன்றிய அரசு உடனடியாக நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, பிப்.4 -**

**பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சனைக் குத் தீர்வு காண உச்சநீதிமன்றம் ஒரு நடுவர் மன்றம் அமைக்க அளித்த தீர்ப்பின்படி ஒன்றிய அரசு நடுவர் மன்றம் விரைந்து அமைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு :-

பெண்ணையாறு மற்றும் அதன் கிளை நதியான மார்கண்டேயா நதி 1892-ஆம் ஆண்டைய மதராஸ் - மைசூர் ஒப்பந்தத்திற்கு உட்பட்ட நதி என்பதால், கர்நாடக அரசு அதன் குறுக்கே கட்டுமானங்களை மேற்கொள்ள தமிழ்நாட்டின் இசைவைப் பெற வேண்டும். ஆனால் தன்னிச்சையாக கர்நாடக அரசு மார்கண்டேயா நதியின் குறுக்கே எர்கோல் கிராமத்தில், பங்காரப்பேட்டை தாலுக்காவில் ஒரு அணையையும் மற்றும் பெண்ணையாற்றிலிருந்து சில நீரேற்றும் திட்டங்களை செயல்படுத்துவதைத் தடுக்க ஆணையிடுமாறு உச்சநீதிமன்றத்தில் 18.05.2018 -அன்று தமிழ்நாடு அரசு அசல் வழக்கை (OS 1 of 2018) தாக்கல் செய்தது. இதில் உச்சநீதிமன்றம் 14.11.2019 அன்று நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசிற்கு ஆணையிட்டது.

ஆனால், ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகம், ஓர் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக் குழுவை (Negotiation Committee) ஜனவரி, 2020-இல் அமைத்தது. இக்குழு 31.07.2020 அன்று தனது இறுதி அறிக்கையில், நடுவர் மன்றத்தை ஜல்சக்தி அமைச்சகம் அமைக்கலாம் என பரிந்துரைத்தது. ஆனால் ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைப்பதை தாமதித்து வந்தது. இச்சூழ்நிலையில் இந்த அரசு பதவி ஏற்றவுடன் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி நான் ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை 06.07.2021 இல் நேரில் சந்தித்து இப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்க கேட்டுக் கொண்டேன்.

இதன் தொடர்ச்சியாக ஒன்றிய அரசிற்கு கடிதங்கள் வாயிலாகவும் நடுவர் மன்றம்



அமைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், உச்சநீதிமன்றத்தில் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

ஆனால், ஒன்றிய அரசு, நடுவர் மன்றம் அமைப்பதை எந்த முகாந்திர மும் இல்லாமல் தாமதப்படுத்தியதல்லாமல் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை குழு அமைக்க கேட்டுக்கொண்டது. உச்சநீதிமன்றத்தின் 23.01.2024 தேதியிட்ட ஆணையின்படி 2வது பேச்சுவார்த்தைக் குழுவை, ஜல்சக்தி அமைச்சகம் 07.02.2024 அன்று அமைத்தது. இச்சூழலில் மீண்டும் ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை 25.07.2024 அன்று நேரில் சந்தித்து நடுவர் மன்றம் அமைக்கும் கோரிக்கையை வலியுறுத்தினேன்.

2வது பேச்சுவார்த்தைக் குழு, பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை என்பதை தனது இறுதி அறிக்கையில் 30.09.2024 அன்று ஜல்சக்தி அமைச்சகத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பித்துள்ளது.

ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைப்பதை மேலும் தாமதித்து வந்ததால் 08.09.2025 அன்று உச்சநீதிமன்றத்தில் அசல் வழக்கினை விரைவில் விசாரிக்க கோரப்பட்டது. இதனைத்தொடர்ந்து, உச்சநீதிமன்றம் 02.02.2026 தேதியிட்ட தீர்ப்பில், பெண்ணையாறு பிரச்சினையை தீர்ப்பதற்காக, ஒருமாத காலத்திற்குள் ஒரு நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசிற்கு உத்தரவிட்டுள்ளது.

பெண்ணையாறு மற்றும் அதன் கிளை நதியான மார்கண்டேயா நதி குறித்த பிரச்சினைகளை தீர்க்க தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல முயற்சிகள் எடுத்து வந்துள்ளதன் விளைவாக உச்சநீதிமன்றத்தில் 2.2.2026 தேதியிட்ட நல்ல தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஒன்றிய அரசு நிறைவேற்றுமென தமிழ் நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழ் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்யும் வகையில் ஒன்றிய அரசு நடுவர் மன்றத்தை உடனடியாக அமைக்குமென எதிர்பார்க்கிறேன்.

மேலும், இப்பிரச்சினை குறித்து தமிழ்நாடு அரசு தொடர்ந்து அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து விரைவில் பெண்ணையாறு மற்றும் மார்க்கண்டேயா நதிநீரை பெற்று, குடிநீர் மற்றும் வேளாண்மை தேவைகளுக்காக நம்பியுள்ள மக்களின் நலன்களை பாதுகாக்கும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# வாய்ச்செலவு வழிப்போக்கன்!




"வடக்கு வாழ்கிறது தெற்குத்
தேய்கிறது" என்னும்
ஆதங்கத்தில் ஆவேசத்தில்
அன்று உதயமான திராவிட
இயக்கம் தான்
இன்று

வடக்கையும்
சேர்த்தே
வாழ்விக்கிறது
என்றால்
அதற்கு

திராவிடத்தின்
தலைமைப் பூகோளமான
தமிழகத்தில்
உருவான
பேரறிஞர் அண்ணா தொடங்கி
டாக்டர் கலைஞர் தொடர்ந்து

இன்று
தமிழ் மண்ணுக்கு காலமும்
கழகமும் கண்டெடுத்து
தந்திருக்கும்

மாண்புமிகு
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
வரை

அவர்கள்
ஆற்றிய
ஆற்றிவரும்
அயராத
அறிவார்ந்த
உழைப்பே
அதற்குத் தலையாய காரணம்
என்பதை
உலகமே அறியும்..

இதெல்லாம்

கண்முன்னே
தன்னைக்
காண வந்த
மக்கள்
கொத்துக்
கொத்தாக
செத்து
மடியும்போது

பாய்ந்தோடிச்
சென்று
பதுங்கிக்
கொண்ட
இதயமற்ற மனிதர்களுக்கு
எப்படிப் புரியும்..

ஆம்

கடமை ஆற்றுவோருக்கு
தலைமேல் சுமை..

வழிப்
போக்கனுக்கு
வாய்ச் செலவு
மட்டும் தானே..

**என்னநாஞ் சொல்றது!**



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்




### விக்கிரவாண்டி தொகுதியில்

# சிட்கோ தொழிற்பேட்டை வளாகம்!

## தமிழ்நாடு அரசு அனுமதி! அன்னியூர் சிவா எம்.எல்.ஏ.வுக்கு பொதுமக்கள் நன்றி!

விக்கிரவாண்டி, பிப்.4–

விக்கிரவாண்டி தொகுதியில் மற்றும் ஒரு சாதனை குறுகிய காலத்தில் தொடர்ந்து திட்டங்களை கொண்டுவரும் விக்கிரவாண்டி எம்.எல்.ஏ வுக்கு தொகுதி மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

திராவிட மாடல் நாயகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இ.மண்டகப்பட்டு கிராமத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு இடம் ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா உத்தரவிட்டுள்ளார்

அரசு அணை எண்.121 நாள் 02.02.2026 இந்த தொழிற்பேட்டை அமைய காரணம் ஆக இருந்த தொடர்ந்து தொகுதி மக்களுக்கு குறுகிய காலத்தில் கொண்டுவரும் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா அவர்களுக்கு பொது மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், இமண்டப்பட்டு கிராமத்தில், 1.41.50 ஹெக்டேர், முறையே அரசு புன்செய் தரிசு, அரசு தீர்வை ஏற்பட்ட தரிசு, அரசு புன்செய் தரிசு குன்று மற்றும் அரசு புன்செய் தரிசு என்ற வகைப்பாடு கொண்ட நிலங்களில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு வருவாய் நிலையாணை எண்.24இன்படி நிலமதிப்பு தொகையை வசூலித்துக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்யலாம் என்ற விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையை ஏற்று, நில நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.